# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம் -09 | சைவநெறி | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1) பொங்கு செஞ்சடையான் புண்ணியமூர்த்தி எனப்படுபவர்
1. விஷ்ணு 2. சிவன் 3. பிள்ளையார் 4. திருமால்

2) தாழம்பூ பொய்ச்சாட்சி சொல்லியவருக்கு உரியவர்
1. பிரம்மா 2. விஷ்ணு 3. உருத்திரன் 4. மகேஸ்வரன்

3) மகாபாரதத்தில் தருமர் ஊடாக எடுத்துக்காட்டப்படும் பண்பு
1. கூட்டுப்பொறுப்பு 2. சகிப்புத்தன்மை 3. பொறுமை 4. சகோதரத்துவம்

4) சம்பந்தர் உபநயனத்தின் போது பாடியது.
1. துஞ்சலும்….. 2. அங்கமும் வேதமும் 3. காதலாகிக்கசிந்து 4. சதுரம்மறை

5) வாழ்க்கையின் நான்கு படிநிலைகளின் மூன்றாவதாக அமைவது
1. கிருகஸ்தவம் 2. சந்நியாசம் 3. வானப்பிரஸ்தம் 4. பிரமச்சரியம்

6) விருந்தோம்பல் பண்பால் உயர்ந்த நாயனார்
1. கண்ணப்பர் 2. இளையான் குடிமாறநாயனார் 3. சுந்தரர் 4. குங்குலியக்கலயர்

7) எந்தவொரு சூழ்நிலையிலும் மனம் தளம்பாது இருப்பது.
1. விட்டுக்கொடுப்பு 2. பொறுமை 3. சகிப்புத்தன்மை 4. பணிவு

8) சம்பந்தருக்க திருமணம் நடைபெற்ற தலம்
1. திருநல்லூர் பெருமணம் 2. சீர்காழி 3. திருவையாறு 4. சிதம்பரம்

9) "விருந்து" என்பதன் பொருளாக விளங்குவது
1. பேணுதல் 2. வரவேற்றல் 3. உபசரிப்பு 4. புதிது

10) "யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி" எனக் கூறும் நூல்
1. திருவாசகம் 2. திருமந்திரம் 3. திருக்குறள் 4.பராபரக்கண்ணி

11) "செங்கணனும் பிரமனும் நம்முள்ளே" எனப் பாடியவர்
1. சம்பந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4.மணிவாசகர்

12) நட்சத்திரங்களின் முதலாவதாக கொள்ளப்படுவது
1. அச்சுவினி 2. ரேவதி 3. கார்த்திகை 4. பரணி



kalvi.lk

13) தேவர்கள் மீதான துதிப்பாடல்கள் அமைத்த வேதம்
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வனம்

14) சரீரத்தை விட்டுப்பிரிந்த ஆண்மா வாழ்வதாகக் கருதும் திசை
1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு 4. மேற்கு

15) சித்திராப் பௌர்ணமி விரதம் அனுஸ்டிப்பது
1. தாய் 2.தந்தை 3. குழந்தை 4. அண்ணன்

16) கஞ்சித்தொட்டி தருமப்பணி செய்தவர்
1. விவேகானந்தர் 2. அப்பர் 3. நாவலர் 4. சம்பந்தர்

17) யாரைத் திருப்திப்படுத்துவதற்காக யாகங்கள் செய்யப்படுகின்றது.
1. இறைவனை 2. அசுரர்களை 3. மக்களை 4. தேவர்களை

18) "காப்பதோர் வில்லும் அம்பும்" பாடிய தலம்
1. திருவதிகை 2. திருக்குறுக்கைவீரட்டம்
3. சீர்காழி 4. திருநல்லூர்ப்பெருமணம்

19) கோளறு பதிகம் பாடியவர்
1. சம்பந்தர் 2. ஆப்பர் 3. சுந்தரர் 4.மணிவாசகர்

20) சிவன் மன்மதனை எரித்த தலம்.
1. திருவதிகை வீரட்டானம் 2. திருக்குறுக்கை வீரட்டம்
3. திருமருகல் 4. சிதம்பரம்

(20 x1 ½ = 30 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு **வினாக்களிற்காக மொத்தம் ஐந்து வினாக்களிற்கு விடை தருக.**

1) பின்வரும் பதிகங்கள் இரண்டினை அடிமுறை பிழையறாது எழுதி பாடியவர் பண் என்பவற்றையும் தருக.

1. துஞ்சலும்.....
2. இல்லக விளக்கது..........
3. காதலாகி.............
4. காப்பதோர்..........

(8 x 2 = 16புள்ளிகள்)

2) 1. பிரம்மா, விஷ்ணுவின் தொழில்கள் யாவை?
2. சோதிப்பிளம்பில் கேட்ட அசரீதி யாது?
3. பொய் கூறியதால் பிரம்மாவுக்கு கிடைத்த தண்டனை யாது?
4. பிரம்மா, விஷ்ணு அடிமுடி தேடிய கதை மூலம் உணர்த்தும் தத்துவம் யாது?

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

3) **"ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு இல்லை"**
1. விழுமியம் என்றால் என்ன?
2. விழுமியப் பண்புகள் 3 தருக.
3. சமூக மக்களிடையே காணப்பட வேண்டிய பண்புகள், ஒழிக்கப்பட வேண்டிய பண்புகள் இவ்விரண்டு தருக.
4. கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதால் அமையும் நன்மைகள் மூன்று தருக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

4) **பஞ்சாங்கம் இந்துவின் வாழ்வியலின் அங்கம்.**
1. இலங்கையில் உள்ள இருவகைப் பஞ்சாங்கங்களும் யாவை?
2. பஞ்சாங்கத்தில் உள்ள 5 உறுப்புக்களும் எவை?
3. வாரத்தின் ஏழு நாட்களிற்கும் உரிய கிரகங்கள் யாவை?
4. பஞ்சாங்கம் பார்க்கும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக.

(2+3+3+3 = 11 புள்ளிகள்)

5) **"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கு நல்லாற்றின் நின்ற துணை."**
1. வாழ்க்கையின் நான்கு படிநிலைகளும் எவை?
2. குடும்பத்தலைவர் ஒருவரின் கடமைகள் மூன்று தருக.
3. பிதிர்க்கடனைத் தீர்க்கும் தீர்த்தங்கள் 3 தருக.
4. பெரியபுராணத்தில் விரும்தோம்பல் பண்பிற்கு சிறப்பிக்கப்படும் மூன்று நாயன்மார்களின் பெயர்களைத் தருக.

(2+3+3+3 = 11 புள்ளிகள்)

6) **பின்வருவனவற்றுள் இரண்டிக்கு சிறுகுறிப்பு எழுதுக.**
1. ஒழுக்கம் உயர்வு தரும்
2. பஞ்சாங்கம்
3. விரும்தோம்பல்
4. சகிப்புத்தன்மை

(5/2 x 2 = 11 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page